# இலங்கையிலுள்ள மட்டக்களப்பு பிரதேசத்தில் நாகதம்பிரான் வழிபாடு - ஓர் ஆய்வு.

அசோகராசா தனுஸ்கா

ஆய்வாளர்,

மட்டக்களப்பு, இலங்கை.

கலாநிதி.(திருமதி) எஸ்.கேசவன்

சிரேஸ்ட விரிவுரையாளர்- (L-1),

இந்துநாகரிகத்துறை,

கிழக்குப் பல்ககலைக்கழகம், இலங்கை.

## ஆய்வுச்சுருக்கம்

உலகில் பல்வேறு பகுதிகளில் புராதன நதிக்கரை நாகரிங்கள் தோன்றிய காலத்தில் இருந்து நாகவழிபாடு சிறப்புற்று காணப்பட்டதை அறிய முடிகின்றது. இந்து சமய மரபில் தொன்மைக்கால முதலாக நிலவி வருகின்ற வழிபாடுகளில் நாகவழிபாடு ஒன்றாக காணப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் நாகவழிபாடு உலகின் நாகர் என்னும் இனத்தவர்களினால் தோற்றுவிக்கப்பட்டு பல்வேறு பகுதிகளிலும் பரவிக்காணப்பட்டுள்ளது. இதனை பல சான்றாதாரங்கள் மூலம் அறியலாம். அந்தவகையில் **"மட்டக்களப்பில் நாகதம்பிரான் வழிபாடு பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு"** என்னும் தலைப்பில் இவ் ஆய்வு கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள பண்டாரியாவெளி பிரதேசத்தை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. இக் கிராமத்தில் களஆய்வுகளையும் வரலாற்று ஆய்வு, விபரணஆய்வு, பகுப்பாய்வு போன்ற ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டு நாகதம்பிரான் ஆலயத்தின் தனித்துவத்தையும் மாற்றத்தினையும் அதன் சிறப்பினையும் வெளிக்கொணரும் வகையில் இவ்வாய்வு அமையப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றும் பாரம்பரிய முறைகளை பின்பற்றுகின்ற கிராமமாக பண்டாரியாவெளி காணப்படுகிறது. இக்கிராமத்தில் மேற்கொள்ளப்படும் நாகதம்பிரான் வழிபாட்டு முறைமை பற்றிய வரிவான ஆய்வுகள் இதுவரை வெளிவரவில்லை இந்த நிலையில் இது பற்றிய ஐதீக கதைகளை சமூகத்திற்கு வழங்குதல் மற்றும் நாகதம்பிரான் ஆலயத்தின் பூசை முறைகள் மற்றும் வருடார்ந்த உற்சவங்களில் இடம்பெறும் விழாக்கள் பற்றிய தகவல்களை சமூகத்திற்கு வெளிப்படுத்தல்.

ஆலயத்தின் தனித்துவம் மற்றும் அதன் சிறப்புகள் பற்றிய தகவல்களை வெளியுலகிற்கு கொண்டு வருதல். ஆய்வின் பிரதான நோக்கமாகும்.ஆரம்ப காலத்தில் கலிங்கப் பெண் ஒருத்தியான நாகம்மை

உடன் வருகை தந்த நாகமானது பண்டாரிவெளியில் அமைந்துள்ள இத்தி மரத்திலுள்ள புற்று ஒன்றினுள் புகுந்தது. இப்புற்றிற்கு நாகம்மா பால் முட்டை என்பன வைத்து வழிபட்டு வந்தாள். அதன் பின்னர் மக்களால் இப் புற்றினை வழிபடனர். ஆரம்பகால மக்கள் மத்தியில் புற்றினை அடிப்படையாக வைத்து வழிபாடு இயற்றப்பட்ட வேளையில் பிற்பட்ட காலங்களில் ஒரு சிறிய ஆலயமாக அமைக்கப்பட்டு மரபுவழி மாறாத கிராமிய முறையிலமைந்த இவ்வாலயம். காலத்தின் தேவையின் பொருட்டு ஆலய அமைப்பானது சமஸ்கிருத மயமாக்கலுகுட்பட்டுச் சென்றுள்ளது.

ஆரம்ப காலத்தில் இவ்வாலயத்தின் நித்திய பூசைகளும் விசேட நாளில் விசேட பூஜைகளும் இடம்பெறுகின்றது. வருடாந்த உற்சவ காலங்களில் ஊர்மக்கள் ஒன்று சேர்ந்து பத்து நாட்கள் திருவிழாக்களை கொண்டாடுகின்றனர். உற்சவ காலத்தில் இங்கு சிறப்பான பல கிராமிய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுகின்றனர். அவை தேசத்து பொங்கல், பால் பழம் வைத்தல் முட்டை வைத்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றது. இவ்வாலயமானது தனக்கென்றுதனித்துவமான விடயங்களை கொண்டு காணப்படுகின்ற அதேவேளை மக்கள் மத்தியில் அதிக நம்பிக்கையும் கொண்டு சமூக மக்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு நிலை கொண்டமைந்துள்ளது. நாகதம்பிரான் ஆலயத்தின் வரலாறு ஆலயத்தின் தனித்துவம் வழிபாட்டு அம்சங்கள் அவற்றின் சிறப்புகள், மரபுவழி மாறாத பல தனித்துவமான வழிபாட்டு முறைகள் போன்ற பல்வேறு அம்சங்களை சமூகத்திற்கு கொண்டு சென்று சமூக மக்கள் மத்தியிலும் ஆலயத்தின் சிறப்பம்சங்களையும் அவற்றின் தனித்துவத்தையும் வெளிக்கொணரும் வகையிலும் எதிர்கால சந்ததியினருக்கு இது போன்ற ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இவ்வாய்வு ஓர்வழிகாட்டியாக அமையும்.

**திறவுச்சொற்கள்** - பண்டாரியாவெளி, நாகதம்பிரான், நாககட்டு, வழிபாடு, கிராமியமுறை, மரத்தடி.

## நாக வழிபாட்டின் தோற்றமும், வளர்ச்சியும்

பழங்குடி மக்களாக காணப்படும் இனத்தவர்களுள் நாகர்களும் ஒரு பிரிவினர் ஆகும். நாகர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்த தீபேத் தோவர்ம குலத்தவர்கள் எனவும் கி.மு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து குடியேறியவர்கள் எனவும் ஆரியர் குடியேற்றம் அதிகரிக்க, அதிகரிக்க தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வந்து குடியேறினார்கள் பண்டைய காலத்தில் உலகின் பல்வேறு பகுதிகளில் வேரூன்றி இருந்த வழிபாடுகளில் நாக வழிபாடும் ஒன்றாகும். **(குகபாலன்., 2000: 24-25)** உலகில் வாழும் அனைத்து மக்களிடையே நாக வழிபாடாகிய பாம்பு வழிபாடு பரவலாகக் காணப்படுகிறது.

ஆதி மனிதன் பாம்பை வழிபட்டால் பல நன்மைகள் கிடைக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடையே நிலவிவருகிறது. எனவே பாம்பைத் தெய்வமாக நினைத்து அதற்கு படையல் வைத்து வழிபடுகின்றனர். இலங்கையில் நாகர்கள் வருகையின் பின்னர் அவர்களின் வழிபாடாகிய நாக வழிபாடு முழு இடங்களிலும் பரந்து காணப்படுகின்றது. இதனை காலத்தால் முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களும், பாளி இலக்கியங்களும், சிற்ப விக்கிரகங்களும், நாணயங்களும் சான்றாதாரங்களாக அமைகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப் பிரதேசத்தில் உள்ள மலைக்குகைகளிலும், மலைப்பாறைகளிலும் உள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்ற நாக, சிவ முதலிய சொற்களும், நாக சிற்பங்களும் இங்கு ஆரம்பகாலம் தொடக்கம் நாகவழிபாடு நிலவியது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாக காணப்படுகின்றது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மீன் பாடும் தேனாடாம் மட்டடக்களப்பு மாவட்டத்தின் தென்மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமமே பண்டாரியாவெளி கிராமமாகும். மண்முனைப் பிரதேசத்திலுள்ள உள்ள மிகத்தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட நாகதம்பிரான் ஆலயங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வாலயம் தொடர்பான வரலாறானது ஒரே ஒரு ஐதீகக் கதையினை மட்டுமே மையப்படுத்திய வகையிலேயே நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## பண்டரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் தோற்றமும் ஆலய அமைப்பும்

மண்முனைப் பிரதேசத்தில் மக்களால் அதிக நம்பிக்கை கொண்ட ஆலயங்களில் ஒன்றாக பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் தொடர்பான வரலாறானது ஒரே ஒரு ஐதீகக் கதையினை மட்டுமே மையப்படுத்திய வகையிலேயே நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். நாகதம்பிரான் ஆலயத்தின் ஐதீகம் பற்றி நோக்குவது சிறப்பானதாகும். மட்டக்களப்பு நாட்டை அமரசேனனின் மகன் குணசிங்க மன்னன் ஆட்சி செய்த காலப்பகுதியில் 'உலகநாச்சி' என்ற பெண்ணரசி வந்து மண்முனைப் பகுதியை குணசிங்க மன்னனிடமிருந்து நிரந்தரமாய்ப் பெற்றுக் குடியேற்றத்தை அமைத்து ஆட்சி செய்தாள்.

இக்காலத்தில் தான் மண்முனையில் இருந்த கலிங்க குலப் பெண்ணொருத்திக்கு ஐந்து பெண் பிள்ளைகள் பிறந்தனர். ஐந்தாவது பெண் குழந்தையுடன் ஒரு சத்திரிய வம்ச நாகபாம்பும் இரட்டையாகப் பிறந்தது. பிள்ளைக்கு முலைப்பால் கொடுத்தும் நாகத்திற்கு பால் கறந்து ஊட்டியும் வளர்த்தனர் நாகத்துடன் பிறந்த அந்தப்பிள்ளைக்கு **'நாகம்மை'** என பெயரிட்டனர்.

மூத்த நான்கு சகோதரிகளும் திருமணம் முடித்து கோறளைப்பற்று மற்றும் ஏனைய இடங்களில் தத்தம் கணவன் தாய் வீட்டில் வாழ்ந்து வந்தனர். நாகம்மை திருமணம் முடித்து ஒரு குழந்தைக்குத் தாயானாள்.எனினும் இல்வாழ்க்கை தொடரவில்லை தாய் இறந்ததும் தாயதிச் சொத்துக்களான் வீட்டுப் பொருட்களைப் பங்கிடுவதற்காக மூத்த சகோதரிமார் நால்வரும் வந்தனர். வீட்டில் இருந்த எல்லாப் பொருட்களையும் ஐந்து பங்காகப் பிரிக்க முற்பட்டனர். **.(தகவல் - குருகுலசிங்கம்.த., வயது-42)** தன்னோடு பிறந்த நாகத்துக்கும் ஒரு பங்கு கிடைக்கும் வகையில் சமமாக ஆறு பங்கு போட வேண்டும் எனவும், அந்தப் பங்கு தனக்கே சேர வேண்டும் எனவும், நாகமும் தனது உடன்பிறப்பு என்றும் நாகம்மை வாதாடினாள். இதனால் மூத்த சகோதரிமார்களுக்கும் நாகம்மைக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு பெரிய கலவரமாக மாறியது.

தலைமீது சுமந்த படி தனது மூன்று வயதுக் குழந்தையுடன் மண்முனையில் இருந்து படகேறி வாவியைக் கடந்து வந்தாள். உடன் பிறந்த நாகமும் பின்னால் தொடர்ந்தது வந்ததாகக் குறிப்பிடுகின்றது. நாகம்மையும், பிள்ளையும் சேவகப்பற்று வயலினூடாக நடந்து கொண்டிருந்தனர். அப்போது மகிழடித்தீவு கிராமவாசிகள் காட்டெருமைக் கன்றுகளைப் பிடிப்பது வழக்கம். அந்த வழியாக இப்பெண் பிள்ளையுடன் வருவதை கண்டு மாடு பிடிக்க மரத்தின் மேல் ஏறி இருந்தவர்கள் கண்டு அவ்வழியே வரவேண்டாம் என்றும், எருமைகள் குத்திக் கொன்று விடும் விலகி வேறு வழியால் வருமாறும் சத்தமிட்டு சைகை காட்டினார்கள்.

எவர் சொல்வதையும் செவி சாய்க்காமல் முன்னேறி நடந்து வந்தாள். அப்பொழுது ஒரு பெரிய காட்டெருமை அப்பெண்ணை எதிர்த்து வந்தது. உடனே அப்பெண் கண்ணகி அம்மன் சிலை இருந்த பெட்டி தலையிலிருக்க தன் இடுப்பில் இருந்த குழந்தையை கீழே இறக்கி விட இக்குழந்தையும் பயத்தினால் தாயின் கால்களைக் கட்டிப்பிடித்தது. தாய் தன்னை நெருங்கி வந்த காட்டெருமையின் கொம்புகளிரண்டையும் தனது இரு கைகளினாலும் பிடித்தாள்.

எருமை அப்படியே அசையாமல் கற்சிலையாக நின்று விட்டது இதனைக் கண்ட மக்கள் வியந்து நின்றனர் மாடுகளைப் பிடிப்பவர்கள் ஓடிவந்து ஒரு சாதாரண பெண்ணால் காட்டெருமைக் கொம்புகளைப் பிடிக்க முடியுமா? என சந்தேகித்து இது ஒரு தெய்வ செயலாக இருக்க வேண்டும் அல்லது இப்பெண் ஒரு தெய்வப் பிறவியாக இருக்க வேண்டும். என நினைத்து தலையில் இருக்கும் பெட்டிக்குள் என்ன இருக்கின்றது என வினவினர்.

அது தனது குல தெய்வமான கண்ணகியம்மன் சிலை என நாகம்மை பதிலளித்து அப் பெட்டிக்குள் இருந்த கண்ணகையம்மன் சிலையைக் காட்டினாள் இதனை கண்டு மகிழ்ந்து மகிழடித்தீவு மக்கள் நாகம்மையை வணங்கி கண்ணகியம்மன் சிலையை மகிழடித்தீவுக் கிராமத்திலே வைத்து வழிபடுவதற்கு தந்து உதவுமாறு கேட்டனர்.

அப்பெண்ணும் அதற்கிணங்கி கண்ணகியம்மன் சிலையை அவர்களிடம் கொடுக்க மகிழடித்தீவு மக்கள் அதனைப்பெற்று அவ் ஊரின் வழிபாட்டு தெய்வமாக ஏற்று அதிலிருந்து ஆலயம் அமைத்து அச்சிலை மகிழடித்தீவு மக்களின் வழிபாட்டு தெய்வமாயிற்று. அன்றிலிருந்து அப்பெண்**'கொம்புக்கிழவி '** எனவும், அப்பெண்ணின் சந்ததியினர் **'கொம்புக் கிழவி வகுத்துவார்'** எனவும் அழைக்கப்படலாயினர். அப்பெண்ணுடன் கூட வந்த நாகமும் நேராகச் சென்று கொண்டிருக்கும் வேளையில் படையாண்ட குளத்து வயல்களின் கிழக்கு எல்லையைக் காட்டிலே உள்ள ஒரு புற்றினுள் புகுந்து கொண்டது. அதன் காரணமாகவே அக்கட்டு **'நாககட்டு'** என இன்றும் அழைக்கப்படுகின்றது. **(பத்மநாதன்.,சி., 1994: 144-157)** பின்னர் இப்புற்றினை அடிப்படையாக வைத்து அக்காலப்பகுதியில் முதன்மை குருக்களாக காணப்பட்ட நம்பியார் கணபதிப்பிள்ளை என்பவரால் சொறிக்கல்லினால் ஆன ஆலயம் அமைக்கப்பட்டது.

பின் நாகதம்பிரானுக்குச் சிலை வைத்து ஆலயம் அமைக்க முற்பட்டனர். அதன் பேறாக 1903 ஆம் ஆண்டில் நாகதம்பிரான் கோயில் மடாலயமாகக் கட்டப்பட்ப்பட்டது அதன்பின் விஷ்ணுவாலயம் கட்டப்பட்டது அதன்பின் நாகதம்பிரான் ஆலயம் இடிக்கப்பட்டுச் சிகரகோபுரமாகக் கட்டிக் கல்லினால் நாகசிலை வைத்து 1970.07.10 ஆம் திகதி ஆனி உத்தரத்தன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மதில்கள், மணித்தூண், கிணறுகள் என்பனவும் கட்டப்பட்டும் உள்ளன.

## பூசை முறைகள்

ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் பூசை முறைகள் 2015 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு நித்திய பூசைகள் இடம்பெறுகின்றது. அவை காலை மதியம் மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் நடைபெறுகின்றன. இதனை அடுத்து செவ்வாய் வெள்ளிக்கிழமை மற்றும் போயா போன்ற விசேட தினங்களில் விசேடமாக பூசைகள் இடம்பெறுகின்றது.

ஏனைய விசேட பூஜை முறைகளாக நவராத்திரி, கேதாரகௌரி விரதம், கந்த சஷ்டி விரதம், தைப்பொங்கல் ஆடிப்பூரம், தைப்பூசம் மற்றும் நாகசதுர்த்தி போன்ற மாதாந்த சிறப்பு நாட்களிலும் பூஜைகள் இடம்பெறுகின்றன. நித்திய நைமித்திய பூசை விழாக்கள் ஆரம்பத்தில் வாரத்தில் வெள்ளிக்கிழமை அன்று மதிய பூசை மாத்திரம் நடந்து வந்தது வருடாந்த உற்சவம் ஆனி உத்திரத்தில் கலிங்க குலக் கொம்பிக் கிழவி வயிற்றுவார் பொங்கிப் பூசித்துப் பால்பழம் கரைத்துப் புற்றில் ஊற்றியதும் அதனையடுத்து வரும் வெள்ளி வாரத்தில் தேசத்தவர் பொங்கல் பெருவிழாவாக நடந்து வந்தது. இப்போது செவ்வாய், வெள்ளி வாரங்களில் மதிய பூசை மட்டும் நடைபெற்று வருகின்றது. **(தகவல் - குருகுலசிங்கம்.த., வயது-42)**

வருடாந்த உற்சவம் ஆறு திருவிழாக் கிராமங்களினால் நடத்தப்பட்டு இறுதித் திருவிழா பொதுத் திருவிழாவாக ஆனி உத்திரமும் நடைபெறுகின்றது. அதனையடுத்து வரும் வெள்ளி வாரத்தையுமே அடிப்படையாகக் வைத்து நடைபெறுகின்றது. 1983 ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கிருஷ்ண ஜெயந்திப் பூசைகள் நடைபெறுகின்றன. நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் பத்துநாட்கள் இடம்பெறுகின்றன உற்சவ காலங்களில் சிறப்பாக காலை பூஜை, மதிய நேர பூஜை இடம்பெற்று மிகவும் பிரம்மாண்டமாக இரவு வேளை திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றில் மூர்த்திகளும் பரிவார தெய்வங்களும் வீதியுலா வருவார்கள். ஆலயத்தின் ஒரு சிறப்பான பகுதியாக காணப்படுகின்ற மரத்தடியானது ஒரு முக்கிய இடமாக மைய இடமாக காணப்படுகின்றது எனலாம்.

மரத்தடியானது ஆலயத்தின் வடக்கு திசை நோக்கியதாக அமையப்பெற்றுள்ளது. மரத்தடியானது ஆரம்பகால ஐதீக கதைகளுடன் தொடர்புபட்ட ஒரு அம்சமாக காணப்படுகின்றது. இவ் மரத்தடியை மையப்படுத்தியதாக ஆனி உத்திர தினத்தன்று இதற்கு பால் பழம் வைத்தல் நிகழ்வு மிகவும் விமர்சையாக கொண்டாடப்படுகின்றது. இந்நிகழ்வின் போது முதலாவதாக பிரதமகுருக்கள், இரண்டாவதாக ஆலய தர்மகர்த்தா ஒருவர் மூன்றாவது கிராமத்தில் வண்ணக்கர் ஒருவர் என மூன்று வகையினரை தெரிவு செய்து மூன்று பேர் மூன்று சட்டிகளில் பால் பழம் எடுத்துக் கொண்டு வருவார்கள். ஆனால் மரத்தடியில் சென்று பால்பழம் சட்டியில் வைப்பது பிரதம குருவினாலேயே மேற்கொள்ளப்படும்.

மரத்தடியில் உள்ள புற்றிக்கு மேற்கொள்ளப்படும் சிறப்பான மற்றுமொரு விடயம் என்னவென்றால் முட்டை வைக்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது. வருடார்ந்த திருவிழா காலங்களில் இவ்வாலயத்திற்கு ஆயிரக்கணக்கான முட்டைகள் வருகின்றது. தற்போது ஏனைய நாகதம்பிரான் ஆலயத்தில் முட்டை வைக்கும் மரபானது குறைவடைந்துள்ளது. ஆனால் இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளாக மரபுகள் மாறாது முட்டைகள் வைக்கும் வழக்கம் பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயத்தில் இடம்பெறுகின்றமை இந் நிகழ்வின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றுகிறது. அப் பொங்கல் விழாவினை தேசத்துப்பொங்கல் என அழைக்கப்படுகின்றது. இப் பொங்கல் நிகழ்வு **'நாககட்டுப் பொங்கல்'** என மக்களினால் அழைக்கப்படுகிறது.

உள்சுற்றுப் பகுதியிலும் வெளிச்சுற்றுப் பகுதியிலும் அதனுடன் இனைந்த வயல்களின் வரம்புக்கட்டுகளிலும் நூற்றுக்கு மேற்பட்ட பொங்கல் பானைகளை பொங்குகின்றனர்.

## நாகதம்பிரான் ஆலயத்தின் சிறப்பம்சம்கள்

பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் பல சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாலயத்தில் மூலமூர்த்தி சிவலிங்கத்துடன் இணைந்த நாகமான கருங்கற்சிலை காணப்படுகிறது. இதனால் இவ் மூலமூர்த்தியை நாகதம்பிரரானாகவும் அதே வேளை சிவனுடன் நாகம் சேர்ந்திருப்பதனால் ஒரு சக்தியாகவும் வழிபாடு செய்யப்படுகிறது.**(தகவல் - குருகுலசிங்கம்.த., வயது-42)** நாகதம்பிரான் ஆலயத்தில் விசேட தினங்களில் மரத்தடியில் இருந்து நாகங்கள் வெளிப்பட்டு மூலஸ்தானத்திற்குள் சென்று கருவறையில் உள்ள மூலமூர்த்தியின் அருகில் இவ் நாகங்கள் இருந்து காட்சி தருகின்றது சிறப்பாகும்.

நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பிப்பதற்கு முன்பே சில நாட்களில் இருந்து அத்தாமரை குளத்தில் அதிகளவான நாகப்பாம்புகளை காணக்கூடியதாக உள்ளது. நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவங்கள் தொடங்கும் முன்னர் அதனை அண்டியுள்ள ஊர்களில் அதிகளவாக நாகப்பாம்புகளின் நடமாற்றங்கள் காணப்படும் எனவும் அதே வேளை வேறு இடங்களில் உள்ள நாகங்கள் ஆலயத்திற்கு வருகை தருவதாகவும் கூறப்படுகின்றது. நாகதம்பிரான் ஆலயத்தின் காணப்படும் மற்றும் ஒரு தனித்துவமான விடயம் என்னவென்றால் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட புற்றடியானது இன்று மண்டபமாக கட்டப்பட்டு காணப்படுகின்றது. இவ் மரத்தடியில் நிலத்தின் கீழ் ஓர் சுரங்கப்பாதை காணப்படுகின்றது. நாகங்களுக்கு இடையே நிலத்தின் கீழ் நடமாற்றங்கள் காணப்படுகின்றன என்பது ஒரு அதிசயமான விடயமாகும்.

நாகதம்பிரான் ஆலயத்தின் தனித்துவமான விடயம் என்னவென்றால் இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து இன்றுவரை மரபு வழியில் வந்த வம்சத்தினரே இன்றும் இவ்வாலயத்தில் பூசகராக காணப்படுவது சிறப்பான முறையாகும்.

## நாகதம்பிரான் ஆலயத்தின் சிறப்பம்சம்கள்

பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் பல சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாலயத்தில் மூலமூர்த்தி சிவலிங்கத்துடன் இணைந்த நாகமான கருங்கற்சிலை காணப்படுகிறது. இதனால் இவ் மூலமூர்த்தியை நாகதம்பிரரானாகவும் அதே வேளை சிவனுடன் நாகம் சேர்ந்திருப்பதனால் ஒரு சக்தியாகவும் வழிபாடு செய்யப்படுகிறது. நாகதம்பிரான் ஆலயத்தில் விசேட தினங்களில் மரத்தடியில் இருந்து நாகங்கள் வெளிப்பட்டு மூலஸ்தானத்திற்குள் சென்று கருவறையில் உள்ள மூலமூர்த்தியின் அருகில் இவ் நாகங்கள் இருந்து காட்சி தருகின்றது சிறப்பாகும். **(தகவல் - குருகுலசிங்கம்.த., வயது-42)**

நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பிப்பதற்கு முன்பே சில நாட்களில் இருந்து அத்தாமரை குளத்தில் அதிகளவான நாகப்பாம்புகளை காணக்கூடியதாக உள்ளது. நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவங்கள் தொடங்கும் முன்னர் அதனை அண்டியுள்ள ஊர்களில் அதிகளவாக நாகப்பாம்புகளின் நடமாற்றங்கள் காணப்படும் எனவும் அதே வேளை வேறு இடங்களில் உள்ள நாகங்கள் ஆலயத்திற்கு வருகை தருவதாகவும் கூறப்படுகின்றது. நாகதம்பிரான் ஆலயத்தின் காணப்படும் மற்றும் ஒரு தனித்துவமான விடயம் என்னவென்றால் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட புற்றடியானது இன்று மண்டபமாக கட்டப்பட்டு காணப்படுகின்றது. இவ் மரத்தடியில் நிலத்தின் கீழ் ஓர் சுரங்கப்பாதை காணப்படுகின்றது. நாகங்களுக்கு இடையே நிலத்தின் கீழ் நடமாற்றங்கள் காணப்படுகின்றன என்பது ஒரு அதிசயமான விடயமாகும்.

நாகதம்பிரான் ஆலயத்தின் தனித்துவமான விடயம் என்னவென்றால் இற்றைக்கு 600 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து இன்றுவரை மரபு வழியில் வந்த வம்சத்தினரே இன்றும் இவ்வாலயத்தில் பூசகராக காணப்படுவது சிறப்பான முறையாகும்.

## நாகதம்பிரான் ஆலயத்தில் காணப்படும் கிராமிய வழிபாட்டு முறைகள்

நாககட்டு எனும் பெருமை பெற்ற ஆலயமாக காணப்படும் பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் ஆகமம் சார்ந்த முறையுடன் இடம்பெறும் வழிபாட்டு முறைகளும் அதேவேளையில் இங்கே கிராமிய வழிபாட்டு முறை உடனான சில பூஜை இடம்பெறுகின்றன. என்பது ஒரு சிறப்பான விடயமாகும். கிராமிய வழிபாட்டு முறைகளில் ஒன்றாக பால் பழம் வைத்தல் நிகழ்வு காணப்படுகின்றது. இந்நிகழ்வினை பண்டைய காலம் தொட்டு இன்றுவரை மேற்கொள்கின்றனர். பண்டாரியாவெளியில் காணப்படும் ஒரு சிறப்பம்சமாக கிராமிய வழிபாட்டில் காணப்படும் முட்டை வைத்தல் எனும் நிகழ்வு ஆலயத்தில் காணப்படுகின்றது.

மக்கள் தங்களின் கோரிக்கைகளையும் தங்களினது வேண்டுதல்களையும் நிறைவேற்றித் தருமாறு இங்கு நேர்த்திகளை வைக்கப்படுகின்றனர். பக்தர்கள் நாகதம்பிரான் மீது அதிகளவு அன்பும் பற்றும் பக்தியும் கொண்டவர்களாகவும் அன்பின் மூலம் தனது வழிபாட்டினை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் வேளையில் கலையாடுவதை போன்று இவர்களுக்கும் உருக்கொண்டு விழுகின்றார்கள். **(தகவல்-சுந்தரலிங்கம்.சி,வயது-58)**

## ஆலயத்திற்கும் சமூகத்திற்கும் இடையே உள்ள தொடர்பு

இந்துக்களின் தொன்மை மிக்க ஆலயமாக பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் மீது பண்டாரியாவெளி மக்களும் அதனை அண்டிய ஊர்மக்கள் மக்களும் அதிக நம்பிக்கை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். மக்களின் பழக்கமாக காணப்படுவது தங்களுக்கு விஷப்பூச்சிகள் தீண்டினால் அதற்கு அவர்கள் பயன்படுத்தப்படும் மருந்தாக நாகதம்பிரான் ஆலயத்தில் காணப்படும் புற்று மண்ணை கரைத்துக் குடித்தால் அவர்களின் உடலில் உள்ள எவ்வகையான விஷங்களையும் இப்புற்றுமண் நீங்கிவிடும் என்னும் நம்பிக்கை அதிகளவாக மக்கள் மத்தியில் காணப்படுகிறது. ஆலயத்தில் இடம்பெறும் பொங்கல்களை கருவறையில் உள்ள மூல மூர்த்திக்கு படைக்கப்பட்ட பொங்கல்களை நோய்வாய்ப்பட்டு காணப்படும் மக்களுக்கு அதனை கொடுத்து அம்மக்கள் அப்பொங்கலை உண்டால் அவர்களுக்குரிய நோய் நொடிகள் நீங்கி விடும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

திருமணமாகி பல வருடங்களாக குழந்தைப்பேறு இல்லை என கருதுபவர்களுக்கு நாகதம்பிரான் ஆலயத்தில் வழங்கப்படும் விபூதி தீர்த்தம் மற்றும் பிரசாதம் என்பனவற்றை உண்டு அருந்திவந்தால் பின்பு பிள்ளைப்பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் அதிகளவாக காணப்படுகின்றது. மக்கள் மத்தியில் காணப்படும் மற்றும் ஒரு நம்பிக்கைக்குரிய விடயம் யாதெனின் இங்கு வடக்கு வாசலை நோக்கி அமையப்பெற்றிருக்கும் மூன்று நாககன்னிகள் சிலையில் தங்களின் கோரிக்கைகளாக அதாவது தங்களுடைய பிரச்சினைகள் போன்றவற்றை மனம் வருந்தி கேட்டால் அத்தெய்வங்கள் வரம் அளிப்பதாகவும் கருதுகின்றனர்.

மக்கள் அவர்களது வீடுகளில் ஏதாவது ஒரு பொருட்கள் தொலைந்துபோதல் அல்லது திருடப்பட்டுபோதல் மற்றும் வேறு பிரச்சினைகள் என்பனவற்றிக்காக ஆலயத்தில் அமைந்துள்ள மூன்று நாககன்னி சிலைகளிலும் நேர்த்திகளை கட்டுகின்றனர். இவ்வாறாக நேர்ந்து கட்டிய பின் தாங்கள் கொடுக்கும் கால அவகாசத்திற்குள் அத்தெய்வகள் அதனை வெளிப்படுத்தும் எனவும் நம்புகின்றனர். **(தகவல்-யோகராணி.க,வயது-42)** கண்கண்ட தெய்வமாககாணப்படும் நாகதம்பிரானிடம் மக்கள் ஏதாவது ஒரு கோரிக்கையின் அடிப்படையில் நேர்த்திகளை வைத்த பின்பு தனது கோரிக்கைகளை நிறைவேறிவிட்டால் அதற்குரிய நேர்த்திப்பொருட்களை கொடுக்கத் தவறினால் நாகபாம்பானது உரியவர் வீட்டிற்கு தேடிவந்து அதனை நினைவூட்டிக் செல்லும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் அதிகளவாக காணப்படுகிறது.

நேர்த்திக்கடனை கொடுக்கத் தவறும் வேளையில் நாகதம்பிரானுடன் தொடர்புபட்ட பூச்சி இனங்கள் தண்டிக்கும் எனவும் அதனோடு நாகதம்பிரான் ஆலயத்திற்கு வருகை தந்து அங்குள்ள நாகத்தின் மீது நம்பிக்கை வைக்காமல் அதனை இழிவாகக் கருதினாலும் பேசினாலும் அதற்கு தீமை செய்தாலும் அவ் நாகமானது பல்வேறு வடிவங்களில் வருகை தந்து அதாவது கீரி, வரிவண்டு, நட்டுவக்காலி, தேள் போன்ற பல வடிவங்களில் வந்து தண்டிக்கும் என நம்பப்படுகின்றது. கண்கண்ட தெய்வமாக காணப்படும்.

நாகதோசம், செவ்வாய் தோசம் மற்றும் ஏனைய தோசங்ககளை உடையவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து கரும்பாம்பு, செம்பாம்பு என்பன கொடுத்து பால்பழம் வைத்து வழிபட்டால் அவர்களுக்குள்ள தோசங்கள் முற்றாக நீங்கிவிடும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. நாகதம்பிரான் அக்கிராம மக்களின் நீதிக்கான தெய்வமாக காணப்படுகிறது.

ஆலயத்தின் வருடார்ந்த உற்சவத்தினை அதனைச் சூழவுள்ள ஆறு கிராமத்தவர் ஒன்றாக இணைந்து ஒற்றுமையுடன் செய்வதனால் அக்கிராம மக்களிடையே நெருங்கிய உறவு நிலை காணப்படுகிறது. **(தகவல்-சுந்தரலிங்கம்.சி,வயது-58)** மட்டக்களப்பில் கிழக்கில் பல நாகதம்பிரான் ஆலயங்கள் காணப்பட்ட போதிலும் பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயத்தின் மீது மக்கள் அதிக நம்பிக்கையும் பக்தியும் கொண்டு ஆலயத்திற்கும் சமூகத்திற்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பு காணப்படுவதால் இவ் ஆலயம் தனிச்சிறப்புடன் நிலைத்து நிற்கின்றது.

## நிறைவுரை

இந்துசமய மரபில் தொன்மைக்காலம் முதலாக நிலவி வருகின்ற ஓர் வழிபாடு நாக வழிபாடாகும். இலங்கைத் தீவில் ஆதிமனிதர்கள் வாழ்ந்த இடங்களில் ஒன்றாகக் கருதப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்மேற்கு பகுதியில் அமைந்து பல பண்பாட்டு பாரம்பரியங்களை தன்னகத்தே கொண்டு காணப்படும். பண்டாரியாவெளிக் கிராமத்தில் உள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் வரலாற்றுக்கதைகள் மற்றும் ஐதீகக்கதைகள் பற்றி சில ஆவணங்கள் இருந்த போதிலும் வழிபாட்டு முறைகள் பற்றிய முழுமையான ஆவணங்கள் இல்லாமையால் பண்டாரியாவெளி நாகதம்பிரான் வழிபாட்டு முறைகள் பற்றி முழுமையாக அறிந்து கொள்வது கடினமாகும்.

ஆய்வின் போது கிராமம் தொடர்பான வரலாற்றை ஓரளவு அறிந்து கொள்வதற்கு ஆவணப்படுத்தப்பட்ட இலக்கிய மூலாதாரங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும் அதிகளவான தகவல்கள் கள ஆய்வின் மூலமே பூர்த்தி செய்யப்பட்டது. பண்டாரியாவெளியில் உள்ள இப்புராதன நாகதம்பிரான் கோயிலின் வரலாற்றம்சங்கள் பற்றிய முழுமையான தகவல்கள் வெளியிடப்படாத நிலையில் இக்கோயிலில் விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்படுமிடத்து மேலும் பல வரலாற்றம்சங்கள் வெளிப்படும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. இதனடிப்படையில் இவ் ஆய்வு அமைந்துள்ளது.

இதில் ஆய்வு அறிமுகம் மற்றும் ஆரம்ப காலந்தொட்டு தற்காலம் வரை நாக வழிபாட்டின் தோற்றமும், வளர்ச்சியும்இ ஆலய வரலாறு மற்றும் ஐதீகக்கதைகள்இ நிர்வாக கட்டமைப்புக்கள் பற்றியும் கூறப்படுகின்றது. மற்றும் பண்டாரியாவெளி நாக தம்பிரான் ஆலய வழிபாட்டு முறைகள், நாகதம்பிரான் கோயிலின் சிறப்புக்கள் மற்றும் இவ் ஆலயத்தின் மேல் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள்இ ஆலயத்தின் தனித்துவங்கள் பற்றியும் கூறப்படுகின்றது.

கிராம மக்களிடையே காலங்காலமாகச் செவிவழிச் செய்திகள், எமது முன்னோர்கள் விட்டுச் சென்றவை என்ற அடிப்படையில் பேணப்பட்டு வந்த ஐதீகங்கள் மற்றும் மரபுகள் வழக்காறுகள் மூலமும் ஆலயத்தின் வரலாற்றுத் தொன்மை புலப்பட்டது எனலாம்.

தொன்மையான வரலாற்றைக் கொண்டதான பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயத்தின் ஐதீகக்கதைகள் மற்றும் வழிபாட்டு முறைகள் பற்றிய முழுமையான ஆவணங்கள் எதுவும் நூல் வடிவில் வெளியிடப்படாமை ஆய்வின் போது எதிர்நோக்கிய மிகப்பெரிய சவாலாக அமைந்திருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தின் நாககட்டு என்ற சிறப்பினை உடைய நாகதம்பிரான் ஆலயத்தில் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரையான அனைத்து விடயங்களும் அதனோடு இணைந்த வரலாற்று பாரம்பரியங்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் என்பனவற்றை கொண்ட மூலாதாரங்கள் அல்லது ஆவணங்கள் காணப்படவில்லை.

ஆரம்ப கால ஆலயத்தின் தொன்மை வாய்ந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் அதன் பொருட்களை தற்காலத்திலும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அதாவது ஆரம்ப காலத்தில் இவ்வாலயம் சொறிக்கல்லினால் அமைக்கப்பெற்று காணப்பட்டது. அதனை பற்றிய தொல்பொருள் சின்னங்கள் எதுவும் இன்று இல்லை. ஆரம்ப காலத்தில் இருந்த ஆலயம் பற்றி ஓர் வரலாற்று ஆவணங்கள் காணப்பட்டிருந்தால் ஆலயத்தின் கால வரையறையை கணிக்கும் கூடியதாக இருக்கும் ஆனால் ஆலயம் பற்றி எந்த இலக்கிய சான்று ஆதாரங்களும் இல்லை என்பதனால் மரபுவழி வந்த கதைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஆலயத்தின் காலத்தினை திட்டவட்டமாகக் கூறப்படுகின்றது.

பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் ஆரம்ப காலத்தில் ஒரு புற்றினை அடிப்படையாக வைத்து வழிபாடுகள் இடம்பெற்ற போதும் காலத்தின் தேவைக்கேற்ப ஆலயத்தின் அமைப்பு முறையானது சமஸ்கிருத மயமாக்களுக்குட்பட்டு சென்றுள்ளது. அவ்வாறு சென்ற ஆலயத்தினுள் இன்னும் மரபுவழி மாறாத கிராமிய முறைகள் சில பின்பற்றப்படுகின்றன. இவ் கிராமிய வழிபாட்டினை தொன்று தொட்டுப்பேணிக் கொண்டு வரவேண்டும்.

பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் மற்றும் ஆலய மரபுகள் அதன் வழிபாட்டு அம்சங்கள் சிறப்புகள் போன்ற பல விடயங்களை ஆலய நிர்வாகசபையினர்களினால் கும்பாபிஷேக மலர்கள் மற்றும் ஆலயத்தினால் வெளியிடப்படும் இறுவெட்டுக்கள் சஞ்சிகைகள் போன்ற பல ஆவணங்கள் வெளியிடப்படுவதன் மூலம் ஆலய சிறப்புகள் பற்றி உலகெங்கும் உள்ள மக்களும் அறியப்பட வேண்டும்.

ஏனென்றால் இன்றைய காலத்தில் பண்டாரியாவெளியையும் அதனை அண்டிய சில கிராமங்களை சேர்ந்த மக்கள் மட்டுமே ஆலயத்தினை வழிபட்டு வருகின்றனர். மக்கள் மத்தியில் பல தெய்வ வழிபாடு காரணமாக நாகதம்பிரான் வழிபாடு மருவிக்கொண்டு மாற்றமடைந்து செல்கின்றது. ஆகவே இதன் அடிப்படையில் ஆய்வின் முடிவானது ஆலயத்தின் ஐதீகங்கள் மற்றும் வரலாற்று கதைகள் அதன் வழிபாட்டு அம்சங்கள் என்பன சரியான முறையில் உறுதியாக பதியப்பட வேண்டும் என்பதற்காக இவ்வாய்வின் மூலம் பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயத்தின் ஆரம்ப வரலாறு ஐதீகக்கதைகள் மற்றும் ஆலயத்தின் தனித்துவம்இ ஆலயத்தின் வழிபாட்டு முறைகள் ஆலயம் பற்றி மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள் ஆலயத்தின் சிறப்பம்சம்கள் போன்றவற்றினை கொண்ட வரலாற்றுப் பழமைமிக்க கோயில் என்றும் அதே வேளை ஆலயம் தொடர்பான முழுமையான தகவல்களை சமூகத்தினரும் எதிர்கால சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையிலும் அத்தோடு இனிவரும் காலங்களில் இவ்வாலயம் தொடர்பாக ஆய்வு செய்பவர்களுக்கு இவ்வாய்வு வழிகாட்டியாக அமையும்.

## உசாத்துணைகள்

### நூல்கள்


| | | |
|---|---|---|
| அறவாணன்,க.ப, | 2005 | பழந்தமிழர்வழிபாடு தமிழ்க்கோட்டம் சென்னை. |
| இந்திரபாலா,கா., | 2006 | இலங்கையில் தமிழர் குமரன் புத்தக இல்லம். |
| ஏகநாயகிவல்லி,சி., | 2003 | ஈழ வரலாற்றுப் பதிவுகள் . |
| கந்தையா,வி.சீ, | 1983 | மட்டக்களப்பு சைவக்கோயில்கள் பாகம்- இந்துசமய அலுவல்கள் திணைக்களம் கொழும்பு. |
| கமலநாதன்,செ., | 2017 | இந்துப் பண்பாட்டு வரலாறு-1 அக்ஷய் வெளியீட்டகம் களுதாவளை-1 மட்டக்களப்பு. |
| கணபதிப்பிள்ளை,க., | 1956 | இலங்கை வரலாறு சுதந்திரன் வெளியீட்டகம் இலங்கை. |
| கிருஷ்ணராசா,செ., | 1999 | இலங்கை வரலாறு பிறைநிலா வெளியீடு யாழ்ப்பாணம். |
| குணசிங்கம்,மு., | 2008 | இலங்கைத் தமிழர் வரலாறுஇ எம்.வி வெளியீடு தென் ஆசியவியல் மையம்- சிட்னி. |
| சிற்றம்பலம்,சி.க., | 1996 | ஈழத்தமிழர் தொன்மை ஈழ ஏதிலியா. மறுவாழ்வுக் கழகம் சென்னை - 600 008. |

நவநாயகமூர்த்தி,நா. 2002 ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள் வானதி வெளியீடு அக்கரைப்பற்று.

பத்மநாதன்,சி., 1994 இலங்கையின் இந்துக் கோயில்கள்-பகுதி-1 இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

கெஜநாதன்,ஞா., 2013 நாகர் எழு வன்னிஇ கலைஇலக்கிய நண்பர்கள் வட்டம் வவுனியா.